**மார்ச் – 20**

**"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்." - யோவா 8 : 31, 32**

தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிற வழிகளிலன்றி வேறு வழிகளில் திவ்விய சத்தியம் ஒருபோதும் கிடைப்பதில்லை. கர்த்தரும், அப்போஸ்தலரும், தீர்க்கதரிசிகளும்தான் அந்த வழிகள். அவர்களால் ஏவப்பட்டு எழுதப்பட்டவைகளில் சொல்லியிருக்கின்ற உபதேசங்களில் நிலைத்திருப்பதும் அவைகளைக் கற்றுக்கொண்டு தியானிப்பதும், முழுமனதுடனே அவைகளில் நம்பிக்கை வைத்து உண்மையோடு நமது குணங்களை அவைகளுக்குப் பொருந்தச் செய்வதும்தான், கர்த்தருடைய வார்த்தையில் நிலைத்திருப்பதைக் குறிக்கிறது. ஆர்வமுள்ள உண்மையுள்ள சீஷர்களாக நாம் கர்த்தருடைய வார்த்தையில் நிலைத்திருந்தால், நாம் உண்மையாகவே, "சத்தியத்தை அறிவோம்" விசுவாசத்தில் உறுதியாயிருந்து "நம்மிடத்திலிருக்கிற நம்பிக்கையின் காரணத்தைச் சொல்லக் கூடியவர்களாக" இருப்போம். பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய் போராடுவோம். "நல்ல போராட்டம் பண்ணுவோம்." "நல்ல அறிக்கையை சாட்சியாக விளங்கப்பண்ணுவோம்" நமது ஓட்டத்தின் முடிவு பரியந்தம் உறுதியாக "யேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவிப்போம். **- Z ’03, 61 (R 3153).**

தேவனுடைய வார்த்தை சத்தியம் என்று நமது கர்த்தர் உறுதி சொல்லுகிறார். அவருடைய வார்த்தையில் தொடர்ந்து இருப்பவர்கள் அதாவது, அதைக் கற்றுக் கொள்ளுகிறவர்களாகவும், நிறைவேற்றுகிறவர்களாகவும், நிலைத்திருக்கிறவர்கள் முடிவாக பிரதிக்கிரியை காண்பிக்கும் இருதயத்தில் தானே தெளிவாக்கும் அதன் வல்லமையிலிருந்து அதை சத்தியம் என்று அறிந்து கொள்ளுவார்கள். இது அவர்களை கிறிஸ்துவின் உண்மையான மாணாக்கராக்கும். வார்த்தைக்குக் கீழ்ப்பட்டிருக்கிற இருதயத்தோடு, அவர்கள் பாவத்திலிருந்தும், சுயநலத்திலிருந்தும், உலகத்தனத்திலிருந்தும், வஞ்சகத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு, நீதியையும், சத்தியத்தையும், அன்பையும் ராஜ்யத்துக்கடுத்த மனதையும் அப்பியாசிக்கத் தடையின்றி இருப்பார்கள். **-P ’30, 30.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ஆதி 18:9; யாத் 19:5; 24:7; எண் 9:23; 14:24; நெகே 1:5; சங் 1:2; 99:7;111:10; 143:10; ஏசா 1:19; மத் 5:19; 13:23; லூக் 6:46-48; யோவா 8:36;14:15; **கோபுர வாசிப்பு : Z ’14, 227 (R 5506)**

**வினாக்கள் :** இந்த வசனம் இந்த வாரத்தில் எனக்கு என்ன அர்த்தமுள்ளதாயிருந்தது? எப்படி? ஏன்? பலன் என்ன?